**DEPOSITION OF WITNESS** J.M -VI

(Chapter xxiii code of criminal procedure)

தேதி **06-06-2019**

IN THE COURT OF
Calendar : சி.சி.191/2018
Miscellaneous :
Preliminary Register: அ.சா- 1
Sessions :
Depositionofwitness:
Prosecution
Defence
Court

Name :திருமதி.அருள்பிரியா க.பெ.லாரன்ஸ்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions ofa Act X of 1873 of the day 06-06-2019

முதல் விசாரணை

நான் தற்போது கோவை புலியகுளம் அந்தோனியர் கோவில் வீதியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி தங்கராஜ் எனது வீட்டை கட்டிய நபர் ஆவார். மற்றொரு எதிரியான சசி மேற்படி கட்டிடத்தை கட்டிய மேற்பார்வையாளர் ஆவார். 2013 வருடத்தில் மேற்படி வீட்டை கட்டுவதற்காக ரூ.3740000/- எதிரி தங்கரைாஜ்ஜிற்கு நான் கொடுத்து விட வேண்டும் என்றும் ஒரு வருடத்திற்குள் வீட்டை கட்டி முடித்து என்னிடம் தந்து விடுவதாகபேசி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம். ஒப்பந்ததில் இல்லாத பிற பகுதிகளை கட்டுவதானால் அதற்கு தனியாக நான் பணம் கொடுத்தால் தான் கட்டி தருவதாகவும் அந்த ஒப்பந்ததில் சரத்துகள் ஏற்படுத்தி கொண்டோம். இந்த வழக்கு சம்பத்திற்கு முன்பாக எதிரிகள் என்னிடம் கெட்ட வார்த்தையால் பேசியது சம்மந்தமாக ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். 06.02.2015 தேதியன்று நானும், எனது மகள் சுகன்யாவும் வீடு கட்டிக் கொண்டிருக்கும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் மற்றும் அவர்களுடன் சுமார் 15 நபர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது மணி மாலை சுமார் 4.30 மணியிருக்கும். நானும், எனது மகளும் வீட்டிற்குள் இருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் வீட்டிள்குள்வந்து தேவடியா வீட்டை விட்டு வெளியே போங்கள் என்று கூறினார் உடனே எனது மகள் சுகன்யா போலிசிற்கு தகவல் சொல்ல போகிறேன் என்று சொன்னதற்கு எதிரி சசி எனது மகள் சுகன்யாவை வீட்டின் ஒரு அறைக்குள் தள்ளிவிட்டு விட்டு உங்கள் இருவரையும் கொன்று விடுவேன் என்று கூறினார். மற்றொரு எதிரியானதங்கராஜ் இங்கு வீடு இருப்பதால் தான் இங்கு இருக்கிறிர்கள் இன்று இரவோடு இரவாக வீட்டை இடித்து விடுவதாக கூறினார். சத்தம் போட்டவுடன்

அங்கு நிறைய கூட்டம் கூடியது. எதிரி சசி கையில் வைத்திருந்த செல்போனால் என்னையும், எனது மகளையும் போட்டோ எடுத்து எங்கள் இருவர் புகைப்படத்தையும் வளைதளத்தில் விட்டுவிடுவேன் என்று கூறி எங்களை மிரட்டினார்கள். எனக்கும், எனது மகளுக்கும் மிகவும் பயமாக கொலை செய்ய வந்தவர்கள் போல் இருப்பதாக தோன்றியது. உடனே எனது மகள் சுகன்யாவை அங்கிருந்து எதிரிகளிடம் இருந்து எதிரிகளை தள்ளிவிட்டுவிட்டு எனது மகள் சுகன்யாவை அழைத்து கொண்டு ராமநாதபுரம் காவல் நிலையம் சென்று ஒரு புகார் மனு கொடுத்தேன். புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு அதசாஆ 1 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக பி7 போலிசார் என்னை விசாரித்தனர்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் புகார் 1வது எதிரி கொடுத்த பிறகு வீட்டின் 1வது எதிரிக்கு பாத்தியப்பட்ட பொருட்களை நான் எடுத்துக் கொண்டதாக 1வது எதிரி சிசிபி போலிசாரிடம் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நுகர்வோர் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு எனக்கு சிசிபி போலிசாரிடம் இருந்து அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். அது எதமசாஆ 1 ஆகும். என்னுடைய புகாரில் வீட்டை பூட்டை சாவி எடுத்து சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். பூட்டை திறப்பதற்கு சாவியை கொடுத்தாரா என்றால் இல்லை. இது பற்றி காவல் நிலையத்தில் தெரிவித்தேன். வீடு கட்டி கொடுத்தற்கு 1வது எதிரிக்கு நான் பணம் கொடுக்க வேண்டியதை தவிர்க்க வேண்டி போலிசார் செல்வாக்கை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியில்லை. சட்ட அறிவிப்பில் 1வது எதிரி என்ன வேலை செய்து இருக்கிறார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. 1வது எதிரி மீது முதல் புகார் கொடுத்த பிறகு உரிமையியல் வழக்கு 1வது எதிரியால் தாக்கல் செய்யப்பட்ட போது உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. முதல் புகார் கொடுத்த பிறகு காப்பி பாரில் வேலை தொடர்ந்து செய்து கொண்டு இருந்தேன் என்றால் ஆமாம். அதையும் பூட்டி விடுவதாக மிரட்டினார்கள். காப்பி பாரை பூட்டிய பிறகு புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். 1வது எதிரி அவருக்கு பணம் தர வேண்டும் என்று பல முறை என்னிடம் கேட்டார் என்றால் ஆமாம். பணம் திருப்பி தராவிட்டால் கொன்றுவிடுவதாக கூறினார். எவ்வளவு நாட்களாக மிரட்டினார் என்றால் 1 வருடமாக மிரட்டினார். எனது மகளுக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் நவம்பர் 9ந் தேதி நடந்தது. முதல் புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 29.01.2015ல் கொடுத்தேன். இரண்டாவது புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 6.2.2015 ல் கொடுத்தேன். திருமணம் முடிந்து எவ்வளவு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் 1.1/2 மாதம் கழித்து கொடுத்தேன். வீடு கட்டுவதற்காக வைத்திருந்த பணத்தை என்னுடைய மகள் திருமணத்ததிற்கு செலவு செய்து விட்டதால் என்னுடைய செல்வாக்கை வைத்து 1ம் எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணததை ஏமாற்ற வேண்டி பொய் புகார் கொடுத்து நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்லை.

பொய் வழக்கு என்றும் 1வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியில்லை.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Sd/-அருள்பிரியா